மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# ஞாழல் பத்தில் பெண்ணின் இடமும், இருப்பும் – ஒரு பார்வை

முனைவர் தி. சுமதி
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
உறுப்புக் கல்லூரி, பெரம்பலூர்

ஒரு நாட்டு மக்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கை நிலையை அந்நாட்டு இலக்கியப் பனுவல்களே பதிவாக்குகின்றன. அவை ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்குமான வேறுபாட்டையும், ஒற்றுமையையும் அறியத் துணை நிற்கின்றன. இடம் மற்றும் ஆண்–பெண் பற்றிய வருணனைகளைக்கொண்டு அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் எத்தகைய படி நிலைகளைப் பேணி வந்தார்கள் என்பதை அறியலாம். பெரும்பாலான இலக்கிய நூல்கள் பெண்களுக்கு இரண்டாம் இடத்தையே வழங்கி இருக்கின்றன என்பது பெண்ணியலாளர் கருத்தாகும். பெண்ணின் இடத்தையும், இருப்பையும் அறிய இலக்கியப் படைப்புகளை மறுவாசிப்பிற்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அத்தகைய மறுவாசிப்பின்போது ஆணுக்குப் பெண் நிகரெனக் கொள்ளாமல் ஆணாதிக்கம் விரும்பும் அச்சம், மடம், நாணம் முதலான ‘பெண்மை’ குணநலன்கள் கொண்டவர்களாகப் பெண்கள் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

ஆணாதிக்கச் சிந்தனையைப் பொதுவான ஒன்றாகக் கருதும்படி இலக்கியங்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. தமிழ் இலக்கிய மரபு ’பெண்மை’யைப் போற்றும் படைப்புகளையே கொண்டாடுவாகத் தோன்றுகிறது.

பெண் பற்றிய தமிழரின் கருத்துக்கள் பெண்மையைப் போற்றி நிற்கின்றன. அதனால் தான் “அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் / நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப”[1] எனவும் பெண்மைக்கான இலக்கணத்தைத் தொல்காப்பியம் வரையறுக்கிறது. மேலும், இதுபோன்ற வரையறை “தையல் சொல் கேளேல்” என்பது வரை நீள்கிறது. தொல்காப்பியப் பெண்மையின் நீட்சியாகவே சங்ககாலத் தலைவி சித்திரிக்கப்படுகிறாளோ எனும் ஐயம் ஏற்படும்வண்ணம் சங்ககாலத் தலைவியின் இயல்புகள் வருணிக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் காணலாகும் காதல், வீரப்பாடல்களில் இடம் பெறும் தலைவியின் இடம் சங்காலத் தலைவனுக்கு இணையானது தானா? எனும் வினாவிற்கு இல்லை என்றே பதிலளிக்க வேண்டியிருக்கிறது. சங்க காலத்தலைவன் வீரமறவனாக,

பகைவெல்லும் சக்தி படைத்தவனாகக் காட்டப்படும்வேளையில், சங்ககாலத் தலைவியோ புறவாழ்வில் தலைவன் பொருது வெல்ல தன்னையே அர்ப்பணிப்பவளாகக் காட்டப்படுகிறாள். பெண்கள் ஒடுக்கப்படுபவர்களாகக் காட்டப்படும் நிலை, தமிழர் வாழ்வில் இலக்கணமாகத் தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. 'பெண்மை'யைப் போற்றுபவளாகக் காதலுக்கு ஏங்குபவளாகப் படைக்கப்பட்டிருக்கும் சங்க கால மகளிரின் நிலையை எடுத்துக்காட்ட ஞாழல் பத்தில் இடம் பெற்றுள்ள தலைவியின் மனப் போராட்டம் சான்றாக இருக்கிறது.

காதல் வாழ்வினையும், கற்பு வாழ்வினையும் முதன்மைப்படுத்திடும் நிற்கும் சங்க இலக்கியங்களில் இடம் பெறும் திணைகள் இயற்கைக்கும், சங்ககாலத் தலைவிக்குமான உறவைச் சுட்டிக்காட்டுகின்றன. குறிஞ்சி. முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்நிலங்களைத் திணைகளாகப் பகுத்துக் கூறியுள்ளனர். ஒவ்வொரு நிலத்திற்கும் வேறுவேறான முதல், உரி, கருப்பொருள்கள் உள்ளன. ஒவ்வொரு நிலத்தினுடைய முதல், உரிப்பொருளை வைத்துக் கருப்பொருளின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. இதனைத் தொல்காப்பியர், "எந்நில மருங்கிறபூவம் புள்ளும் / அந்நில பொழுதொடு வாரா வாயினும் / வந்த நிலத்தின் பயத்த ஆகும்"[2] என்ற நூற்பாவில் திணை என்பது நிலம் மட்டுமல்ல, நிலம் சார்ந்த பொருளை, பல்லுயிர்களை அதன் பண்பினை மையமாகக் கொண்டது என்கிறார். 'நிலப்பாகுபாட்டை உற்றுநோக்கும்போது, பாலைக்கென்று தனிநிலம் இல்லை என்பதால் நான்கு நிலங்களும் ஐந்து வகையான உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன என்பது தெளிவாகிறது. இவ்வாறாக உணர்வுகளை வெளிப்படுத்தும் குறியீடுகளாகக் கருப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்கிறார் வெ.பிரகாஷ்.'[3]

கருப்பொருள்கள் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவிகளாகத் திகழ்ந்தன என்பதை, "அன்னை கூறினார் புன்னையது சிறப்பே / அம்ம நாணுதும், நும்மொடு நகையே"[4] என்னும் நற்றிணை 172வது பாடலின் மூலம் அறியமுடிகிறது. தலைவி தான் வளர்த்த புன்னை மரத்தின் கீழ்நின்று காதல் மொழி பேசி இன்புற எண்ணிய தலைவனிடம், இப்புன்னையை வெறும் மரம் எனக் கருத வேண்டாம் என்றும், தன் தங்கையாக எண்ணி வாழ்ந்து வருவதாகவும் கூறுகிறாள். தன் தங்கையின் எதிரில் தன் தலைவனுடன் காதல் மொழிபேசி இன்புற முடியாது எனும் தன் உள்ளக் குறிப்பினைக் கருப்பொருள் மூலமாக வெளிப்படுத்தக்கூடியப் பாங்கினை உணர முடிகிறது. கருப்பொருள்கள் உயர்திணைக்கு நிகராக இடம்பெற்றுள்ள பாங்கினை அக இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன எனில் மிகையல்ல.

சங்க காலப் பெண்கள் ஆணாதிக்க எல்லைகளை மீறாதவர்களாகவே காட்டப்படுகின்றனர். இவ்வாறாக, அக இலக்கியங்களுள் ஒன்றான ஐங்குறுநூறிலுள்ள நெய்தல் திணையிலமைந்த ஞாழல்பத்து எனும் பகுதி உள்ளது. இந்த பத்துப் பாடல்களிலும் இடம்பெறும் கருப்பொருளான 'ஞாழல்' மரத்தின் தோற்றம் இயல்பினைக் கூறுவதால் 'ஞாழல்பத்து' எனும் தலைப்பிடப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். ஞாழல்பத்தில் இடம் பெற்றுள்ள பத்து பாடல்களும் ஞாழல் எனும் மரம் பற்றிய

குறிப்புக்களை உள்ளடக்கியவை. ஞாழல் மரங்கள் கடற்கரைப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படும். இது கொன்றை மர வகைகளுள் ஒன்றாகும். மேலும், இம்மரத்தினை 'புலிநகக்கொன்றை' எனவும், 'பொன்னாவரசு' எனவும் அழைக்கப்படுவதுமுண்டு. நெய்தல் நிலத்து மகளிர் இதன் நிழலில் ஆடிப்பாடி இன்புறுவது வழக்கம். இதன்மலர் அளவில் சிறியது, இம்மலர்களைச் சங்ககால மகளிர் தலையில் சூட்டியிருப்பதைப் பாடல்கள் மூலம் அறியமுடிகிறது. இம்மரத்தின் கிளைகள் கருமை நிறத்திலிருக்கும். இக்கிளைகளில் நாரைகள் தங்குவதுண்டு என்று இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

ஞாழல் மரம் பற்றி நேரடியாகக் கூறுவதுபோலப் பாடல்கள் அமையப் பெற்றிருந்தாலும், அப்பாடல்களில் இடம் பெறும் தலைவியின் வலி மிகுந்த வாழ்க்கையும், மனப்போராட்டமும் 'ஞாழல்' மரத்தின் துணையோடு புலப்படுத்தப்படுகின்றன. ஞாழல் மரத்தின் இயல்புகள் தலைவியின் இயல்புகளோடு ஒத்துப் போவது போலப் பாடல்கள் எழுதப்பட்டிருப்பது சிறப்பு என்றாலும், தலைவியின் பெண்மை நலன்களையே பெரிதும் சிறப்பித்துக் கூறுவதாகக் கொள்ளலாம்.

களவு வாழ்வின் தொடக்கமான காட்சி, ஐயம், தெளிவு, துணிவு இவைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது ஆணின் அதிகார அணுகுமுறை புலப்படுகிறது. காதல் வாழ்வின் தொடக்கத்தில் ஏற்படுகின்ற வேட்கை, இடைவிடாது நினைத்தல், மெலிதல், நாணம் நீங்குதல், தனக்குள்ளே பேசுதல், நோக்குபவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயங்குதல், சாதல் என்பன இருவருக்கும் பொதுவானது என்று தொல்காப்பியம் களவியல் 97-வது நூற்பாவில் குறிப்பிட்டுள்ளது ஒப்புநோக்கினுக்குரியது. இருப்பினும், முன்னிலையாக்கிச் சில கூறுதல், அவளது நலத்தினைப் பாராட்டுதல், அவள் குறிப்பறித்து பேசுதல், தன்னிலை உரைத்தல், தெளிவுபடுத்தல் (களவு 98) என்பன போன்ற காதல் மொழி பேசக் காதலனுக்கு மட்டுமே அன்றும் இன்றும் வாய்ப்பு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், "சக உயிர் என்ற நிலையில் பெண்ணை ஆணுக்கு இணையாக வைக்காமல் ஆணை மட்டும் முதன்மைப்படுத்தும் போக்கு காணப்படுகிறது. அகவாழ்வில் காதல் மூலம் பெண்ணை வெல்வதும், புற வாழ்வில் போர் மூலம் நிலத்தை வெல்வதும் ஆணின் இலக்கணமாகப் புனையப்பட்டன"[5] என்கிறார் ந.முருகேசபாண்டியன். சமூக வரையறைகள் பெரும்பாலும் பெண்களைத் தலைவனின் நலனின் அக்கறையுள்ளவர்களாக, தலைவனின் சிறுபிரிவைக்கூடத் தாங்க முடியாதவர்களாக இருக்கும்படி நிர்பாந்தம் செய்கின்றனவோ என ஐயம்கொள்ளச் செய்கிறது. சான்றாக, வரைவிற்குப் பொருள் தேடுவதற்காகத் தலைவன் பிரியும்பொழுது, பிரிவினைத் தாங்காமல் தலைவி உடல் மெலிவுறுகிறாள். அப்போது தோழியிடம் வரைவிற்காப் பிரிந்துள்ளான் எனத் தான் ஆற்றியிருந்தாலும், ஞாழலும், சேருத்தியும் பூத்ததால் மணமும், நீர்த்துறையிலிருந்து விழும் நீர்த்துளிகளும் தன் மீது படுகின்றபோது இன்ப நினைவினை உண்டாக்கி வாட்டுகின்றன எனவும், ஞாழல் செருத்தியோடு இணைந்து மணம் கமழ்வது போல, தான் தலைவனோடு சேர்ந்து மணக்கவில்லையே எனத் தலைவி கவலைப்படுகிறாள். இது போன்றதொரு நிகழ்வினைக் குன்றியனார், "ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்/ செல்வி மருதின் செம்மலோடு தாஅய்த் / துறை..........."[6] எனும் பாடலின் மூலமாக ஞாழலின் வெண் சிறு

கடுகு போன்ற பூக்கள் மருத மரத்தின் சிவந்த மலருடன் தரையில் பரவிக்கிடந்து அவன் ஊரினை அழகு செய்தன. ஆனால், அவரைத் தழுவித் திருமணம் செய்த என் தோள்கள் அவர் பிரிவினால் மெலிந்து தனிமைத் துன்பத்தை அழகு செய்தன என்று சுட்டிக் காட்டியுள்ளார். துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் தலைவியிடம், இரவுக் குறியிலேயே எப்போதும் வருவதை விரும்பும் தலைவனை மறந்தால்தான் தலைவியே நீ உறங்க முடியும் என்று தலைவன் கேட்குமாறு தோழி கூறுகிறாள். அப்போதாவது அவன் விரைவாகத் திருமணத்திற்கு உடன்படுவான் எனத்தோழி எண்ணுகிறாள். பிரிவுத்துயரிலுள்ள தலைவி ஞாழல் கிளைகளிலுள்ள பூங்கொத்துகளில் பறவைகள் தங்கும்போது பாரம் தாங்காமல் வீழ்வது போன்று, தானும் அவன் பிரிவினால் நலிவுற்றதாகவும், பறவைகள்கூட உரிய நேரத்திலும் உரிய இடத்தில் தங்குதலை அறிந்திருக்க, தன் தலைவன் தன்னை மணந்துகொள்ளும் எண்ணம் இல்லாதிருப்பதாகவும் கூறுகிறாள். மேலும் தன்னால் அவனை மறக்க இயலாமல் உறக்கத்தையும் இழந்தேன் என்று தலைவி கூறுவதிலிருந்து அவனை நினைத்து அவள் தான் வருந்துகின்றாளே தவிர, அவன் களவுறவையே விரும்பியுள்ளான் என்பது புலப்படுகிறது. கண்கள் உறங்குவதை விரும்பாததை "புள்ளிமிழ் பெருங்கடல் சேர்ப்பனை / உள்ளேன் தோழி படீஇயர் என் கண்ணே"[7] என்று நம்பிகுட்டுவன் பறவைகள் எப்போதும் ஒலியெழுப்பும் கடற்கரைக்குத் தலைவனைத் தான் நினைக்கமாட்டேன். தன் கண்கள் இனி உறங்கும் என்று தன்னைத் தானே தேற்றிக் கொள்வதாகப் படைத்துள்ளது இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். "எக்கர் ஞாழல் குருகு தனித்து உறங்கும்" (ஐங். 144) எனும் வரிமூலம் காலம் சரியாக அமைந்தாலும் தலைவியை வரைவு மேற்கொண்டு ஒன்றுபட்டு வாழ்வதை நினைக்காமல் தனியாக வாழ்வதையே விரும்புகிறான் என்பதைத் தலைவி, தன் தலைவனைப் போன்றே கருப்பொருள்களுள் ஒன்றாகிய குருகு தன் துணையைப் பிரிந்து வாழும் ஊரினன் என்பதால்தான் அவனுக்கு தான் அளித்த இன்பம், அன்பு ஆகியவற்றை முழுவதுமாக மறந்து தனித்து வாழ்தல் அவனுக்கு எளிதாகிவிட்டது என நினைக்கிறாள். ஆனால், அவனை நினைத்து நினைத்துத் தன் உடல் அழகு கெட்டு பசலை வந்து வாட்டுகிறது என்று வருந்துகிறாள். இதைப்போலக் காதல் வயப்பட்ட பெண்ணின் மனவுணர்வினை, "பசலை உணீயர் வேண்டும் / திதலை அல்குல் என் மாமைக் கவினே"[8] எனும் பாடல் மூலம் வெள்ளி வீதியார் அழுத்தமாகச் சித்திரித்திருக்கிறார். தலைவியின் வலியை உணரமுடியாதவனாகத் தோன்றும் தலைவன், இன்ப நுகர்வுப்பொருளாகத் தலைவியை நினைக்கின்றானோ என எண்ணுகின்றதருணத்தில் ஒருவாறாகத் தலைவன் தலைவியை திருமணம் செய்ய உடம்படுகின்ற நேரத்தில், தலைவியின் சுற்றத்தார் மறுக்கின்றனர். அவ்வேளைதனில் தலைவன் தன்னுடன் உள்ள சான்றோர்களை அனுப்பி தவைவியின் சுற்றத்தாரிடம் பேசி உடம்படச் செய்கிறான். இதையறிந்த தோழி, தலைவியிடம் ஞாழலின் பெரிய கிளையைக் கடல் நீர் மோதி வளைப்பது போன்று, தலைவன் நம் சுற்றத்தாரைச் சான்றோர்கள் மூலமாகத் தன்மயமாக்கும் உறுதியினைக் கொண்டவன் எனக் கூறி வியக்கிறாள். இதைக் கேட்ட தலைவிக்கு மனக்கலக்கம் நீங்குகிறது. அச்சமயத்தில் தலைவியின் சுற்றத்தார் தலைவனிடம் வரைபொருள்

கேட்கின்றனர். அவர்கள் கேட்ட வரைபொருளைச் சான்றோர் மூலம் கொடுக்கிறான். அவ்வாறு கேட்ட வரைபொருளில் இல்லாத ஒன்றிற்கு அதற்கு நிகராக வேறு ஒரு பொருளைக் கொடுத்து இசைவு பெற்றான், “எக்கர் ஞாழல் மலர் இல் மகளிர் / ஒண் தழை அயரும் துறைவன் / தண் தழை விலை என நல்கினை நாடே”[9] எனும் பாடல் வரிகள் தலைவிக்கு நிகராக உலகத்தையே தந்தாலும் தகும் எனக் குறிக்கின்றன. ஆனால் தனக்கு உரிமையான நாட்டையே வரைபொருளாகக் கொடுத்த தலைவன் தலைவிக்காக எதையும் தருவான் என்பதை உணர்த்துகிறது எனத் தோழி கூறுகிறாள்.

பொதுவாக அகப்பாடல்களில் இடம் பெறும் பரத்தமை ஒழுக்கம் ஞாழல் பத்திலும் இடம் பெற்றிருக்கிறது. ’ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்களுக்கு மட்டும் கற்பை வலியுறுத்திய ஆண்கள் தாங்கள் மட்டும் பரத்தமை ஒழுக்கத்தை கைவிடாதவர்களாக இருந்துள்ளனர் என்று அ.செல்வராசு பதிவு செய்துள்ளார்’[10] தலைவியின் ஏக்கங்களையும் வலிகளையும் புறத்தள்ளிவிட்டு தலைவன் பரத்தையரை நாடிச் செல்வதன் மூலம் சங்ககாலத் தலைவனின் ஆணாதிக்க மனப்பாங்கு புலனாகிறது. தலைவனின் பரத்தமை ஒழுக்கமே பெண்ணின் துன்பத்திற்கு காரணம் என்றாலும், அதைப் பொறுத்துக்கொண்டு குடும்பம் நடத்தும் பெண்களையே சங்க இலக்கியப் பாடல்களில் காணமுடிகிறது. “மகிழ்நன் பரத்தமை / நோவென் தோழி கடன் நமக்கு எனவே”[11] எனக் குடும்பக் கடமைகளுக்காகப் பரத்தமையைப் பொருத்துக் கொள்பவர்களாகவே பெண்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தலைவியைப் பிரிந்து பரத்தையின் வீட்டில் சில நாள் தங்கியிருந்த பின்னர் மீண்டும் தன் வீட்டிற்கு வந்த தலைவனிடம் தோழி களவுக் காலத்தில் ஞாழல் நிறைந்த சோலையில் தலைவியுடன் கூடி மகிழ்ந்ததையும், அவனைப் பிரிந்து தலைவி உடல் மெலிந்து துன்புறுவதையும் அறியாதவன் போன்று அவளோடு இன்று இன்பமாக வாழ்வதைச் சுட்டிக்காட்டி, ஞாழலின் பூவானது வருந்துமாறு புள்ளினங்கள் தங்கி ஆரவாரம் செய்வதைப் போன்று, அவன் தலைவியின் வருத்தத்தை உணராமல் பரத்தையரோடு இன்புற்றிருப்பதையே விரும்புவதைச் சுட்டிக்காட்டுகிறாள். இதுவரை சொல் பேணாதவன் இனியுமோ பேணுவான்? என வினவுவதன் மூலம் தலைவியின் அன்பு புறக்கணிப்பிற்குள்ளாவது சுட்டிக் காட்டப்படுகிறது. மேலும் களவுக் காலத்திலிருந்த அன்பானது, கற்புக் காலத்தில் வெறுப்பாகும் என்பதனை, “வேம்பின் பைங்காய் என் தோழிதரினே / தேம்பூங்கட்டி என்றனீர் / பாரியறம்பில் பனிச்சுவைத் தண்ணீர்”[12] எனும் பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன. தலைவியை அடைவதற்கு சிரமமானக் களவு காலகட்டங்களில் தலைவியோடு இருக்கும்போது கசப்பு மிகுந்த வேப்பங்காய் தந்தாலும் வெல்லக்கட்டி போன்று இருப்பதாகத் தலைவன் கூறினான். ஆனால், தலைவியை அடைவதற்கு இலகுவான கற்புக் காலத்தில் பறம்புமலையின் சுனை நீரைத் தந்தாலும் உவர்ப்பாக இருப்பதாகக் கூறுகிறான். இக்கருத்தினை நோக்கும்போது தலைவிக்கு விருப்பம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தலைவன் நினைத்தால்தான் தலைவியைக் கூட முடியும் எனும் நிலை ஏற்பட்டிருப்பது புலப்படுகிறது.

மணல் மேட்டிலுள்ள ஞாழலின் கிளைகளைக் கடல் அலைகள் தழுவி இன்புறுவதைப் போன்று, தலைவன் தன்னுடன் புணர்ந்து இன்புற்றிருந்தாலும் அதனால் இன்பம் அடையாமல் தன்னைப் பிரிந்து துன்பம் தரக்கூடிய பரத்தமையிலேயே எண்ணம் கொண்டவனாக இருக்கிறான். அவன் நிலையான இல்லற வாழ்வினை விரும்பாது பரத்தையால் தழுவப்பெறுவதையே இன்பமாகக் கருதுகிறான், இந்நிலையைத்தான் அலைகள் ஓரிடத்தில் நிலைபெறாத தன்மையுடையவை. அதைப் போலவே தலைவனும் எனச் சுட்டுவதன் மூலம் அவனுடைய இயல்பினைத் தலைவி கூறுகிறாள். இப்பரத்தமை ஒழுக்கத்தினை. "ஓரூர் வாழினும் சேரி வாரார் / சேரிவரினும் ஆரமுயங்கார்"[13] என்று ஒரே ஊரிலிருந்தாலும், நம் வீட்டிற்கு வரமாட்டார். அவ்வாறு வந்தாலும் உள்ளம் பொருந்திக் கூடமாட்டார் எனப் பாலைப் பாடிய பெருங்கடுங்கோ தலைவியின் மனக் குமுறலோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தலைவி வலிகளை ஏற்பவளாகவும், அவ்வாறு வலிகளையும், தனிமையையும் தந்தாலும் தலைவனுக்காக ஏங்குபவளாகப் படைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கனவாகும்.

ஞாழல் பத்து தலைவியின் கூற்றுக்களை ஆராய்ந்து பார்க்கும்போது அவளுடைய மனம் களவு வாழ்க்கையானது, கற்பு வாழ்க்கையில் முடிய வேண்டுமே என்ற கவலையினால் சூழப்பட்டிருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது. ஞாழலில் பூத்துக் குலுங்கும் பூக்கள் நான்கு புறமும் மணம் வீசுவது போன்று, ஊரறியச் சான்றோர் முன்னிலையில் சுற்றத்தார் விரும்பியது அனைத்தையும் கொடுத்துத் தலைவியை வரைவு மேற்கொண்ட பெருங்காதலன் தலைவன். ஆகவே, களவுக் காலத்தில் உண்டான புணர்ச்சியில் காதலிருந்தாலும், அப்போது பயத்தினால் அந்த இன்பம் முழுமை பெறவில்லை. அப்பொது கிடைக்காத இன்பத்தினை இப்போது முழுமையாகப் பெற்று இன்பமுடன் தலைவியின் மணவாழ்வும் மணம் வீசவேண்டும் என வாழ்த்தும் தோழி, தலைவனிடம் ஞாழலின் பூவின் சுணங்கு இருப்பது போன்ற சிறிய மார்பகங்களைக் கொண்ட தலைவிக்கு அழகுத் தேமல் வந்து வருத்தம் செய்யுமாறு ஒரு போதும் பிரியாமல் இருப்பீராக என்று கூறுவதைப் போன்று, "சிறுவீ ஞாழல் தேன் தோய் ஒள் இணர் / ..... வன் முறை முற்றத்து / ஒண் பொறிச் சுணங்கின் ஐதுபடத் தாஅம்"[14] என்று உலோச்சனார் கூறுவது குறிபிடத்தக்கது.

தோழியின் வாழ்த்து தலைவனின் மீதுள்ள நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகிறது. மேலும் பிறிதொரு பிரிவினைத் தலைவி தாங்கமாட்டாள் எனும் குறிப்பும் மறைமுகமாகக் காட்டப்படுகிறது.

ஞாழல் பத்தில் இடம் பெறும் தலைவியின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் தோழியின் கூற்றுகள், சங்க கால மகளிர் நிலையைப் புலப்படுத்துபவையாகக் கொள்ளலாம். சங்க கால மகளிர் தலைவனுக்காகத் தங்கள் வாழ்க்கை முழுவதும் இன்னல் சுமக்கத் தயாராக இருப்பவர்களாகவே காட்டப்படுகிறார்கள். தலைவனின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்களாக, தலைவனின் வருகைக்காகக் காத்திருப்பவர்களாக, தலைவனின் வாழ்வையே தன் வாழ்வாகக்கொண்டு வாழும்

அர்ப்பணிப்பு வாழ்வை மனமுவந்து ஏற்பவர்களாக சித்திரிக்கப்படுகிறார்கள். மேலும் தனக்கென எவ்வித நிலைப்பாடும் கொள்ள இயலாத கையறு நிலையிலேயே இருக்க வைக்கப்படுவதே பெண்களுக்கு இன்பம் தருவது எனும் ஆணாதிக்க மனநிலை ஞாழல் பத்து பாடல்களிலும் எதிரொலிக்கிறது எனில் மிகையல்ல.

**சான்றெண் விளக்கம்**

1. இளம்பூரணம் உரை, தொல் – பொருள் – களவியல், நூ.1045.
2. இளம்பூரணர், தொல் – அப்ம், நூ.21.
3. வெ.பிரகாஷ், திணை உணர்வும் பொருளும், ப.21.
4. ச. சாம்பசிவனார், தமிழ் இலக்கியத்ததில் நெய்தல் திணை, ப.27.
5. ந. முருகேச பாண்டியன், மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கிய படைப்புகள், ப.02.
6. .........................., குறுந்தொகை, பா.எ.50.
7. மேலது, பா.எ.243.
8. மேலது, பா.எ.27.
9. .................., ஐங்குறுநூறு, பா.எ.147.
10. அ.செல்வராசு, ஆண் ஆளுமையில் கற்பு, ப.62.
11. ............................., கலித்தொகை, பா.எ.75.
12. ............................., குறுந்தொகை, பா.எ.196.
13. மேலது, பா.எ.231.
14. ............................., நற்றிணை, பா.எ.191.